# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 18 வெள்ளிக்கிழமை 31.05.2024 கதிர் 273



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# பொருளாதார வேலைத்திட்டங்களோ அதற்கான குழுவோ இல்லாத கோழைகளே விவாதத்திற்கு பயந்து ஓடுவார்கள்!

## விவாதத்திற்கு வாருங்கள்!, என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

**பொருளாதார குழுக்களுக்கு இடையிலான விவாதத்திற்கு பயப்படுபவர்கள் சரியான பொருளாதார வேலைத்திட்டமோ பொருளாதார குழுவோ இல்லாத கோழைகளாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

**வங்குரோத்து நிலையிலுள்ள நாட்டில் நாம் செல்ல வேண்டிய பாதை, தொலைநோக்குப் பார்வை மற்றும் வேலைத்திட்டம் குறித்து விவாதம் மற்றும் கருத்து பகிர்வுகள் கொண்டதாக விவாதம் என்பது இருக்க வேண்டும், அதன் மூலம் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பரிமாறிக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.**

2➤





## படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நடேசனின் 20 ஆவது நினைவேந்தல் நிகழ்வு

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் நாட்டுப் பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி கோரிய போராட்டமும் மட்டக்களப்பு காந்திப் பூங்காவிலுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் இன்று .நடைபெற்றது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பவற்றின் தலைவர் வா.கிருஷ்ணகுமார்

2➤

## விவாதத்திற்கு வருவீர்களா மாட்டீர்களா? தயக்கமின்றி நேரடியாக கூறி விடுங்கள்!

### தே. ம. சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க



நிறைவேற்று அதிகாரம் என்பது ஜனாதிபதியின் முழுமையான அதிகாரம் ஆகும், அனைத்து பொருளாதார மற்றும் அரசியல் நடவடிக்கைகளும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன, பொருளாதாரக் குழுக்களால் அல்ல. எனவே, முதலில் விவாதம் என்பனது பொருளாதார குழுக்களுக்கு இடையில் அல்ல தலைவர்களுக்கு இடையிலேயே இருக்க வேண்டும் என தேசிய மக்கள்

2➤

## க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு!

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று பிற்பகல் வெளியாகின.

பரீட்சைகள் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.


https://www.doenets.lk எனும்பரீட்சைகள்திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து, பரீட்சைப் பெறுபேறுகளைப்

2➤




## வெறிநாய்க் கடிக்கான தடுப்பூசி இன்மையால் 'ரேபிஸ்' நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது!

### சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்தது



நாய்களுக்கான 'ரேபிஸ்' தடுப்பூசி பற்றாக்குறையால் வெறிநாய் நோய் (நீர் வெறுப்பு) தீவிரமாக பரவி வருவதாக சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாய்க்கடியால் ஏற்படும் ரேபிஸ லிருந்து மனிதர்களைப்பாதுகாக்கவும், ரேபிஸ் நோயைத் தடுக்கவும், கால்நடைத்துறைகளால்நாய்களுக்கு இந்தத் தடுப்பூசி ஆண்டுக்கு ஒருமுறை போடப்படுகிறது. அதற்காக கால்நடை துறையினர் கட்டணம் வசூலித்தாலும், தெருநாய்களுக்கு கூட கால்நடைதுறை மூலம் இந்த தடுப்பூசி போடப்படுகிறது.

தற்போது இந்த தடுப்பூசி மருந்தை கால்நடை துறைகளுக்கு அரசு முறையாக வழங்காததால் ஒரு தீவிரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் இந்த தடுப்பூசி விற்பனைக்கு உள்ளது, ஆனால் விலை அதிகம். இதன் காரணமாக நாய்களுக்கு தடுப்பூசி போட எவரும் அதிக விலை கொடுப்பதில்லை. இதனால்தான் நாய்களுக்கு முறையாக தடுப்பூசி போடப்படாததால் பாரிய சுகாதார பிரச்சினைகள் ஏற்படும் என சுகாதார வட்டாரங்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

கொடிய ரேபிஸ் நோய் நாட்டில்

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## படுகொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில்நடைபெற்ற நினைவேந்தல்நிகழ்வில், படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் திருவுருவப் படத்துக்கு முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.கே.ரவீந்திரன் ஆகியோர் இணைந்து மலர்மாலை அணிவித்தனர்.

அத்தோடு நிகழ்வில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக ஏற்பாட்டாளர்கள் அவரின் திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தியதோடு, ஈகைச் சுடர்களையும் ஏற்றினர்.

அதனைத் தொடர்ந்து நினைவுத் தூபிக்கு முன்பாக இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.ஶ்ரீநேசன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம், முன்னாள் மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன், முன்னாள் பிரதி மேயர் தி.சத்தியசீலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் எஸ்.சுரேஷ், மட்டக்களப்பு மாவட்ட இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் பொன்.உதயஷரூபன், மாவட்ட ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நினைவேந்தல் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அரசியல் பிரமுகர்கள் அனைவரும், மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் சமூகப் பற்றாளர் ஐயாத்துரை நடேசன் ஊடகப் பணியோடு, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் பயணிக்க வேண்டுமென்பதில் உறுதியாகச் செயற்பட்டார். இந்நிலையில் 20 ஆண்டுகள் கடந்தும் அவருக்கான நீதி இதுவரை மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய அரசுகளால் வழங்கப்படவில்லை. எனவேதான், சர்வதேச விசாரணைகளை வேண்டி நிற்கின்றோம்" - என்றனர். (அ)

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'சக்வல' நட்புறவு வகுப்பறைத் திட்டத்தின் 209 வது கட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை வீரகெட்டிய ராஜபக்ஷ பாடசாலைக்கு 1,177,000 ஷரூபா பெறுமதியான நட்புறவு வகுப்பறையை கையளிக்கும் நிகழ்வில் நேற்று (30) கலந்து கொண்டு அங்கு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் நானோ என்னை சார்ந்த குழுவோ என்றுமே விவாதங்களிலிருந்து தப்பிச் செல்வதில்லை, பொருளாதார திட்டங்களோ அதற்கான தகுந்த குழுவோ இல்லாதவர்களே இதுபோன்ற விவாதங்களிலிருந்து தப்பிச் செல்வார்கள், ஒரு பொருளாதார திட்டமோ அதற்கான குழுவோ இல்லாதவர்களுக்கு அதற்கான உரிய ஆலோசனைகளை தர நாம் தயார், எனினும் எல்லாவற்றிற்கும் முன்னதாக தலைவர்களின் விவாதம் மற்றும் பொருளாதார குழுக்களின் விவாதம் இரண்டுக்கும் ஒரேயடியாக இரண்டு தினங்களை தீர்மானம் செய்யுமாறு அவர்களை கேட்டுக் கொள்கின்றேன் எனவும் தெரிவித்தார். (ரெம-108)

## க.பொ.த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பார்வையிட முடியும். 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்றிருந்தது.

குறித்த பரீட்சையில் 3 இலட்சத்து 46 ஆயிரத்து 976 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 2 இலட்சத்து 81 ஆயிரத்து 445 பாடசாலை பரீட்சாத்திகளும், 65 ஆயிரத்து 531 தனியார் பரீட்சாத்திகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விவாதத்திற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், விவாதம் சாத்தியமில்லையென்றால் நேரடியாகக் கூற வேண்டும் எனவும் குறிப்பிட்ட அவர், சஜித்தின் கட்சியை சேர்ந்த பொருளாதார குழு முன்வைத்த கடித்தை சஜித் பிரேமதாசவின் ஆலோசகர் நாலக கொடஹேவா நிராகரித்துள்ளதாகவும், அதில் சஜித் பிரேமதாசவின் கையொப்பம் இல்லை என கூறப்படுவதால், அனுமதியில்லாத அவ்வாறான கடிதமொன்றை அடிப்படையாக வைத்து விவாதிப்பதில் அர்த்தமில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ரெம-109)

## வெறிநாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரவாமல் தடுக்க, இந்த தடுப்பூசியை உடனடியாக நாட்டிற்கு தருவிக்க வேண்டும் என கால்நடை மருத்துவத்துறையினர் அரசுக்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-110)




## கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் 'சத்சங்கம்' - ஆன்மீக பண்பாட்டு நிகழ்வு

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் 'சத்சங்கம்' - ஆன்மீக பண்பாட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை, கொழும்பு 13, புனித அந்தனி மாவத்தையிலுள்ள தம்பையா முதலியார் சத்திரத்தின் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 10.30 முதல் மதியம் 12 மணிவரை நடைபெற ஏற்பாடாகியிருக்கும் இந்த நிகழ்வில் வேத பாராயணம், தியானம், பஜனை, ஆன்மீக உரை, ஆரதி என்பன இடம்பெறவுள்ளன. (04)

# வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளை படிப்படியாகத் தளர்த்துவது அவசியம்!

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க

*வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்துவது முக்கியமாகும் என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். அதற்கமைய தற்போதுள்ள வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தி தேவையான அந்நிய செலாவணியை நிர்வகிக்கும் திறன் மத்திய வங்கிக்கு இருப்பதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.*

*வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது நம்பகமான அடிப்படையில் வெளிநாட்டுகையிருப்பு இருப்பதாககாட்டப்படும் போது அரசாங்கம்எடுக்க வேண்டியகொள்கை ரீதியிலான முடிவாகும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.*

*வாகன இறக்குமதியை படிப்படியாக இலகுபடுத்துவதாக அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும், அதற்கமைவாக சுற்றுலா வர்த்தகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள ஆளுநர், அதன் பின்னர் வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான வாகனங்களின் அடிப்படையில் அந்த கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்படுவது முக்கியம்எனவும்மேலும்அவர்தெரிவித்துள்ளார்.*

*(ரெம-112)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சங்கிலியனின் 405 ஆவது சிரார்த்ததின அனுஷ்டிப்பும் நினைவுதின நிகழ்வும்





யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி சைவத் தமிழ் மன்னன் 2 ஆம் சங்கிலியனின் 405 ஆவது சிரார்த்ததின அனுஷ்டிப்பும் நினைவுதின நிகழ்வும் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.

இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தலைமையில் யாழ்ப்பாணம், நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலிய மன்னன் சிலையடியில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சங்கிலிய மன்னன் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவர் ஆறுதிருமுருகன், யாழ் மாநகர ஆணையாளர்,சமயப் பெரியோர்கள், ஊர் மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சங்கிலிய மன்னனுக்கு அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து யமுனா ஏரியிலும் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட யமுனை நதித் தீர்த்தமும் கலக்கப்பட்டது. (01)



## அம்பாறையில் புகைத்தல், மது எதிர்ப்பு நிகழ்வுகள் இன்று

(எம் எப். நவாஸ்)

சர்வதேச புகைப்பொருட்கள் எதிர்ப்பு தினத்தையொட்டி, அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலிலும் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளுக்கு பிரதம அதிதிகளாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்வாண்டுக்கான புகைத்தல், மது எதிர்ப்பு தொனிப்பொருளான "நண்பா போதைக்கு புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் – வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டி எழுப்புவோம்" என்பதற்கு ஏற்ப மரதன் ஓட்டப் போட்டி, புகைத்தல் எதிர்ப்புக் கொடி விற்பனை, வீதி நாடகங்கள் விழிப்புணர்வு கருத்தரங்குகள் என்பன இடம்பெற்றன.

மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பணப் பரிசில்களும் வெற்றிக் கிண்ணாங்களும் சான்றிதழ்களும் வழாங்கப்பட்டன.






## கிளிநொச்சியி விவசாயத் திணைக்களத்தில் மாத்தில் இரு தடவை பயிர்ச்சிகிச்சை முகாம்

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகள் பயிர்ச்செய்கையின் போது எதிர்கொள்ளும் நோய்த்தாக்கத்தை குறைக்கும் நோக்கில், கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் பயிர்ச்சிகிச்சை முகாம் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

மாதத்தில் இரண்டாவது வாரத்தின் செவ்வாய்க்கிழமையும் அதே மாதத்தில் இறுதி வாரத்தின் வெள்ளிக்கிழமையும் குறித்த பியிர்சிகிச்சை முகாம் கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயத் திணைக்களத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நாட்களில் விவசாயிகள் தங்களது பயிர்ச்செய்கையின் போது பயிர்களின் நோய் நிலைமைகளை நேரடியாகக் காண்பித்து கட்டுப்படுத்தல் முறைகளை அறிந்துகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (02)

# விருதுகளைக் கொண்டு படைப்பாளரை அறிய முனையக் கூடாது!

## இளம் எழுத்தாளர், ஊடகவியலாளர் நிவேதா ஜெகநாதன்



பேட்டி கண்டவர் –
**சதீஸ் பிரியங்கா**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
ஊடகக் கற்கைகள் துறை




இலக்கியத்துறையில் தன் பயணத்தை மேற்கொண்டு வரும் இளம் ஊடகவியலாளர் நிவேதா ஜெகநாதன், பதுளை மாவட்டத்தில் அப்புத்தளையில் உள்ள 'பிற்றத் மலை' எனும் இடத்தில் பிறந்தார். அவர் சாதாரண தரம் வரையிலும் தொட்டுலாககலை தமிழ் கனிஷ்ட வித்யாலயத்தில் கற்று அதன் பின்னர் காலச் சூழ்நிலை காரணமாக குடும்பத்தோடு இடம் பெயர்ந்து கொழும்புக்குச் சென்று, கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் உயர்தரத்தைக் கற்றுள்ளார்.

அதன் பின்னதாக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பைக் கற்று, பின்னர் யாழ்.ப்பாண பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார். அவரை சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்ததில் பெருமகிழ்ச்சி.

**பிரியங்கா –** உங்களுக்கு ஊடகத்துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

**நிவேதா –** எனக்குப் பாடசாலை தான் கலைத்துறைக்கு வித்திட்டது. பாடசாலைக் காலங்களில் விரும்பியும் விரும்பாமலும் ஆசிரியர்களின் கட்டாயத்தில் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, பாவோதல் போட்டி என்ற எல்லாப் போட்டிகளிலும் பங்கு பற்றி அதிலே முதலிடங்களை பெற்ற போதுதான் எனக்கு என் மீது நம்பிக்கை மற்றும் ஆர்வம் ஏற்பட்டது.

விலைமதிக்க முடியாத காலங்களும், அனுபவங்களும், வெற்றிகளும், தோல்விகளும் பாடசாலைக்






காலத்தில் தான் ஆரம்பமாகின்றன. இப்போது இப்படி ஓர் இடத்தில் இருப்பதும் பாடசாலையில் இடப்பட்ட அடித்தளம் தான். அதற்கு முதலில் என்னை வளர்த்து விட்டு ஊக்கப்படுத்திய அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது பெற்றோருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

நான் செய்திகளைப் பார்க்கும்போது ஏற்பட்ட அவாவினால் தான் ஊடகத்துறையில் ஆர்வம் ஏற்பட்டது. வானொலியில் செய்தி கேட்கும் போதும் சரி, தொலைக்காட்சியில் செய்து பார்க்கும்போதும் சரி என்னை அறியாமல் எனது வாய் செய்திகளை வாசிக்கும். பத்திரிகைகளில் உள்ள செய்திகளை எல்லாம் நான் ஒவ்வொன்றாய் வாசித்து தொலைபேசியில் சேமித்து மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்பேன். நான் விடும் சிறு சிறு பிழைகளை எல்லாம் மீண்டும் வாசிக்கும் போது திருத்திக் கொள்வேன்.

**பிரியங்கா –** உங்களுடைய ஊடகத்துறைப் பயணம் பற்றிக் கூறுங்கள்?

**நிவேதா –** உயர்தரம் முடித்த பிறகு ஊடகத்துறைக்குச் சென்று விட வேண்டும் என்ற ஆசையில் தொடர்ந்து வேலை வாய்ப்புக்களுக்காக முயற்சித்துக் கொண்டிருந்தேன். என்னைத் தவிர வீட்டில் உள்ள யாருக்கும் இந்த வேலையில் ஈடுபாடு இல்லை. அதனாலேயே கிடைத்த பல வாய்ப்புகளைத் தவறவிட நேர்ந்தது. பல போராட்டங்களின் பயனாய் ஒருவாறு வீட்டில் உள்ளவர்களின் மனதை மாற்றி, வேலைக்குச் சம்மதம் வாங்கியவுடன் வேலையும் கிடைத்தது.

யுரீவியில் செய்தி வாசிப்பாளினி ஆகும் வாய்ப்பும் கிடைத்தது. ஊடகத்துறையில் முதல் அடியை அங்கு தான் எடுத்து வைக்க முடிந்தது.

தொலைக்காட்சி என்றாலே பலருக்குப் பிடிக்கும். ரீவி யில் தோன்றுவது பெருமை என சிலரும், ரீவியில் வேலை வாய்ப்புக் கிடைப்பது வரம் என சிலரும் நினைத்துக் கொண்டிருந்த காலம் கடந்து இப்போது ஒவ்வொருவரும் தங்களுக்கு என ஒரு யுட்யூப் பக்கத்தை உருவாக்கி விஞ்ஞான உலகில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கின்றார்கள். எது எவ்வாறாக இருந்தாலும் செய்வனவற்றை சிறப்பாகவும் பிறருக்குப் பயனுள்ளதாகவும் செய்வார்களாயின் சிறப்பு.

தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்ற துறைகளுக்கு என்று எப்பொழுதுமே ஒரு தனிச்சிறப்பு உள்ளது. ஊடகத்துறையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோரால் மட்டுமே இந்தத் துறையில் தொடர்ச்சியாகப் பயணிக்க முடியும். இப்போது நான் முழுநேர ஊடகப் பணியில் இருந்து விலகி, சுதந்திர ஊடகவியலாளராக இருக்கின்றேன். இருந்தாலும் இந்தப் பணியில் இருந்த நாட்டம் துளியேனும் குறையவில்லை.

**பிரியங்கா –** தாங்கள் நாவல்கள் மற்றும் சிறுகதைகள் எழுதுவீர்கள் என அறிந்தேன். அவற்றில் நீங்கள் பேசுபொருளாக எதை முன் வைக்கின்றீர்கள்?

**நிவேதா –** ஆமாம். நான் சில நூல்களை எழுதியுள்ளேன். ஐந்து நாவல்கள் மற்றும் ஒரு சிறுகதைத் தொகுப்புகளை எழுதி வெளியிட்டுள்ளேன். எனது நாவல்களின் மையக்கரு மலையகத்தினை அடிப்படையாகக் கொண்டது.

மலையகத்தைப் பொறுத்தவரை கதை எழுதுவதற்கு என்று பல காரணிகள் தாராளமாகக் கொட்டிக் கிடக்கின்றன. ஒரு பக்கம் இயற்கையின் அற்புதத்தைத் தன்னகத்தை கொண்ட பரப்பு, மறுபுறம் இலங்கையின் பொருளாதாரத்தின் வருவாய் என்றாலே முக்கியப் பங்காக விளங்கும் தேயிலைத் தோட்டம் என்பனவாகும். இவை இரண்டுக்கும் பின்னால் மறைக்கப்பட்ட எங்கள் மக்களும், அவர்களின் சொல்லொணாத்துயரங்களும், அவர்களுடைய வாழ்வியலில் ஏற்படும் சவால்களும் தான் என்னை எழுத வைத்தன. இவை மலையகத்தைக் கொண்டு எழுதத் தூண்டும் காரணிகளாக விளங்கின.

எனது நாவல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையிலானவை. சொந்த வாழ்க்கை அனுபவங்கள் அதிகமாயினும் அதற்குக் கற்பனை மேலோட்டங்களைக் கலந்தே கொண்டு செல்ல முடிந்தது. ஒரு படைப்பானது எமது சமூகம் பற்றி அதிகமாக பேசும் போதுதான் அங்கே ஒவ்வொருவரின் கதையையும் ஆங்காங்கே தொட்டுச் செல்ல முடிகின்றது. அது அவசியமானதும் கூட.

**பிரியங்கா –** தாங்கள் எழுதிய புத்தகங்களில் மிகவும் பிடித்த புத்தகம் எது? எதனால்?

**நிவேதா –** நான் எழுதிய ஆறு நூல்களும் பிடித்தமானவைதான். அதிகமாக முதலாவது நூல் 'பாலை நில ரோஜா' மற்றும் மூன்றாம் நூலான 'முதலில் பூத்த முல்லை' என்பன சற்று அதிகமாகப் பிடித்த நாவல்கள் ஆகும். இந்த நூல்கள் அதிகம் பெண்ணியம் மற்றும் சமூக வளர்ச்சி தொடர்பில் பேசி உள்ளமை குறிப்பிட்டுக்கூற வேண்டிய விடயமாகும்.

பிடித்த இரண்டு நூல்களில் அதிகமாக பெண்கள் பேசுபொருளாக, ஒரு சமூகத்தில் முன்னேற்றகரமான வளர்ச்சியாளராக பெண்களின் வகிபங்கு தொடர்பில் எழுதி உள்ளதாலும், துணிச்சல் மிக்க பெண்கள் மூலம் வீட்டில் இருந்து சமூகம் வரை பல்வேறு மாற்றங்களைக் காண முடியும் என்பதனை இவற்றில் எழுதி உள்ளதாலும் பிடிக்கும்.

**பிரியங்கா –** ஒவ்வொரு புத்தக வெளியீட்டுக்கும் நீங்கள் பெற்ற அனுபவம் எவ்வாறானது?

**நிவேதா –** ஒவ்வொரு நூல் வெளியீடும் நிறைய அனுபவங்களைக் கற்றுத் தந்தன. குறிப்பாக, முதலாவது நூல் வெளியீட்டின் மூலம் நிறையப் படிப்பினைகள் கிடைத்தன. ஒரு நூல் வெளியீட்டுக்கான ஆயத்தங்களை எவ்வாறு செய்ய வேண்டும், ஒரு நூல் வெளியீட்டினைத் திறம்பட செய்வதற்கு எவ்வாறான முன்னேற்றங்கள் செய்ய வேண்டும், எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டும் போன்ற விடயங்கள் எல்லாம் முதல் வெளியீட்டின் மூலம் கிடைத்த அனுபவங்களாகவே நான் எடுத்துக் கொண்டேன்.

அதனால், அடுத்தடுத்த வெளியீடுகளைச் செய்யும போது இந்த விடயங்களை திருத்திக் கொண்டு செய்ய முடிவதுடன் வெற்றிகரமான வெளியீடுகளைச் செய்த திருப்தியையும் என்னால் பெற முடிந்தது.

**பிரியங்கா –** இதுவரைக்கும் உங்களது படைப்புகளுக்குக் கிடைத்த அங்கீகாரம் என்ன?

**நிவேதா –** நான் பெரும்பாலும் ஊடகத்துறை மற்றும் கலைத்துறைகளில் விருதுகளை எதிர்பார்ப்பதில்லை. விருதுகளைக் கொண்டு எப்போதும் படைப்பாளரை அறிய முனையக் கூடாது. ஏனென்றால் இப்போது விருதுகள் மலிந்து போயுள்ளன. கலைஞருக்குத் தனது திறமையே முதல் அங்கீகாரம். இதுவரையான காலப்பகுதியில் ஊடக இலக்கியப் பயணத்திற்காக சில தனியார் விருதுகள் எனக்குக் கிடைத்துள்ளன.

**பிரியங்கா –** உங்களது எதிர்கால இலக்குப் பற்றி கூறுங்கள்?

**நிவேதா –** எனக்கு இலக்கியத் துறைக்குள் சிறந்து பயணிப்பதுவே இப்போதைய இலக்காக இருக்கின்றது. நாம் நேசிக்கின்ற துறையினைத் திறம்படச் செய்வதை விட மகிழ்வு வேறேது?

# தேசிய போதை ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு கிளிநொச்சியில் விழிப்பு வீதியோட்டப் போட்டி

தேசிய போதை ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாபெரும் வீதியோட்ட நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை திருமுறுகண்டி பிள்ளையார் கோயிலடியில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு வீதியோட்டப் போட்டி, "நண்பா போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைத்து வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டி எழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்றது.

குறித்த வீதியோட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பதில் சமுர்த்திப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில், பழைய மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றது.



இப்போட்டியில் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் ஜெயபுரத்தை சேர்ந்து சுமன் கீபன் முதலாமிடத்தையும், பூநகரி பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த கண்ணன் கலையரசன் இரண்டாம் இடத்தையும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த சிவகுமார் நிர்மல் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

மேலும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த ரவீந்திரகுமார் நிக்ஸன் நான்காம் இடத்தையும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த தீபன் தூயவன் ஐந்தாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். கரைச்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சிவச்சந்திரன் பிரதீபன், மோகன் சுதாகர், கிருஸ்ணராசா ரஜிந்தன் ஆகியோரும் கண்டாவளையைச் சேர்ந்த ஜோன்சன் போல் ஜான்சன், கரைச்சியை சேர்ந்த குலேந்திரன் சுமன் ஆகியோரும் முறையே ஐந்து ஆறுதல் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(02)



# சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் விழிப்புணர்வு சைக்கிளோட்ட பவனி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர்கள் அமைப்பான ஸஹிரியன் 90 அமைப்பினர் விழிப்புணர்வு சைக்கிள் பவனியொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை முன்றலில் இருந்து ஆரம்பமான சைக்கிள் சவாரி, கல்முனை-அக்கரைப்பற்று பிரதான வீதியினூடாக அட்டப்பள்ளம் வரை சென்று மீண்டும் ஆரம்பித்த இடத்தை அடைந்தது.

செல்லும் வழியில் புகைத்தலால் ஏற்படும் தீங்கு பற்றிய கையேடுகளை பொது மக்களின் விழிப்புணர்விற்காக அவர்கள் வழங்கியிருந்தனர்.






# கல்முனை பிரதேச செயலக கல்முனைக்குடியில் புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புத் தினம்

(எம்.எம்.றம்ஸீன்)

2024ம் ஆண்டின் புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புத் தின விழிப்பூட்டல் மற்றும் நிதி சேகரித்தல் என்பன கல்முனை பிரதேச செயலக கல்முனைக்குடி சமுர்த்தி வலயத்தில், வங்கி முகாமையாளர் யூ.கே.சிராஜ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வங்கியின் பிரதி முகாமையாளர், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

இந்த பிரதான நிகழ்வினைத் தொடர்ந்து ஏனைய ஒவ்வொரு பிரிவுகளிலும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.

"வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டி எழுப்புவோம் "எனும் தொனிப்பொருளின் கீழ் சமயத்தலைவர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்களின் பங்களிப்புடன் இந்த நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

# மதவாதிகளுடனும் இனவாதிகளுடனும் இணைந்துள்ள 'மௌபிம ஜனதா கட்சி'யிலிருந்து பதவி விலகியுள்ளேன்

## முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவிப்பு




தனது முழு அரசியல் வாழ்நாளில் மதவாதிகளுடனும் இனவாதிகளுடனும் பயணித்ததில்லை எனவும், மௌபிம ஜனதா கட்சியானது மதவாதிகளுடனும் இனவாதிகளுடனும் இணைந்து செயற்பட்டதன் காரணமாக தான் அக்கட்சியில் வகித்த அனைத்து பதவிகளையும் இராஜினாமா செய்வதாகவும் முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

சந்தர்ப்பவாதத்தையும் மக்களை ஏமாற்றுவதையும் தான் என்றுமே ஏற்றுக் கொள்வதில்லை எனவும் தெரிவித்த அவர் மௌபிம ஜனதா கட்சியின் மூலம் நவீன இளைய சமுதாயமொன்றை கவர்ந்தவாறு ஜனரஞ்சக அரசியல் பயணமொன்றை முன்னெடுக்கவே தான் எதிர்பார்த்திருந்ததாகவும் குறிப்பிட்டார்.

அன்று மட்டுமல்ல இன்றும் நாளையும் கூட மதவாதத்தையும் , இனவாதத்தையும் தான் என்றுமே புறக்கணிப்பதாகவும், தேசபக்தியும் மதவாதமும் இரண்டும் வேறு வேறானவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்றார். இதனால், தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்ச மற்றும் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் உதய கம்மன்பில ஆகியோருடன் மௌபிம ஜனதா கட்சி இணைந்துள்ளமையை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதாலேயே கட்சியின் பதவிகளை இராஜினாமா செய்ததாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறானவர்களுடன் இணைந்து சென்றவர்களின் கதி என்னவாகியது என்பதற்கு உதாரணங்கள் பல இருப்பதாகத் தெரிவித்த அமுனுகம, அவ்வாறானவர்களுடன் இணையும் போது ஓரிருமுறை அல்ல, பலமுறை சிந்திக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். மௌபிம ஜனதா கட்சி பிரபல வர்த்தகர் திலித் ஜயவீர தலைமை வகிக்கும் கட்சி என்பது குறிப்பிடத்தக்கது. (ரெம-107)

# இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் 45 மணி நேர தியானம்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் நேற்று (30) முதல் 45 மணி நேரத் தியானத்தை மேற்கொண்டுள்ளார்.

சுவாமி விவேகானந்தர் இதே பாறையில் 3 நாட்கள் தியானமிருந்திருந்தது வரலாறு. 142 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது இந்தியப் பிரதமர் மோடி அங்கு தியானம் செய்வதால் இது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. இதில், 6 கட்டத் தேர்தல் முடிந்துள்ள நிலையில், 7ஆவது மற்றும் இறுதிக் கட்டம் 7 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசம் ஆகியவற்றில் உள்ள 57 தொகுதிகளில் நாளை நடைபெறவுள்ளது. இதற்கான தேர்தல் பிரசாரங்கள் இன்றுடன் (31) நிறைவுபெறுகின்றன.

இதனையடுத்து தேர்தல் முடிவுகள் ஜூன் 4ஆம் திகதி வெளியிடப்படவுள்ளன.

கடந்த இரு நாடாளு மன்றத் தேர்தல்கள் முடிவடைந்த பின்னரும் இந்தியப் பிரதமர் மோடி தியானம் மேற்கொண்டிருந்தார்.

2014இல் உத்தரப் பிரதேசத்தில் பிரதாப்கரில் தியானம் செய்தார். 2019இல் இமயமலையில் கேதார்நாத் குகையில் மின்வசதி இல்லாத அறையில் காவி உடையுடன் தியானம் மேற்கொண்டார்.

இந்நிலையில் தற்போதைய தேர்தல் முடியும் தறுவாயில் மோடி, இந்தியாவின் கடைக்கோடியிலுள்ள விவேகானந்தர் மண்டபத்தில் 3 நாட்கள் தொடர்ச்சியாக 45 மணி நேரம் தியானம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த 2014 மற்றும் 2019 நாடாளுமன்றத் தேர்தல்களில் உத்தரப் பிரதேச மாநிலத்தின் வாராணசித் தொகுதியில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்ற மோடி, அதே தொகுதியில் மூன்றாவது முறையாகப் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் அஜய் ராய் களத்திலிருக்கிறார்.

இந்நிலையில் வாரணாசியில் இறுதிக்கட்டப் பிரசாரத்தை மேற்கொண்ட மோடி, கன்னியாகுமரிக்குச் சென்று, அங்குள்ள விவேகானந்தர் நினைவிடத்தில் தியானத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனை முன்னிட்டு, கன்னியாகுமரியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மொத்தமாக 48 மணித்தியாலங்கள் இந்தியப் பிரதமர், விவேகானந்தர் நினைவிடத்தில் தங்குவதால், இறுக்கமான முறையில் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 11 எஸ்.பிக்கள் மேற்பார்வையில், 3,500 பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக, விவேகானந்தர் மண்டபத்துக்கான படகுப் போக்குவரத்தும் நேற்றே ரத்துச் செய்யப்பட்டிருந்தது. (04)








# கற்பிட்டியில் 19 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 617 கிலோ பீடி இலைகள் சிக்கின - இருவர் கைது!

கற்பிட்டி - உச்சிமுனை கடற்பிரதேசத்தில் மிதந்து கொண்டிருந்த நிலையில் ஒருதொகை பீடி இலைகள் நேற்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

மேலும், இதனுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 46 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் உச்சமுனை கடற்படையினர் கற்பிட்டி - உச்சமுனை கடல்பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது, அங்கு சந்தேகத்துக்கிடமான இயந்திரப் படகு ஒன்றைப் பரிசோதனை செய்தனர். இதன்போது, அந்த இயந்திரப் படகில் 19 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 617 கிலோ 600 கிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கும் நோக்கில் குறித்த பீடி இலைகள், கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாகக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால், கைப்பற்றப்பட்ட 617 கிலோ 600 கிராம் பீடி இலைகள் மற்றும் இயந்திரப் படகு, கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வட மேல் மாகாண போதை ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டு, இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்ட விரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக்குச் சொந்தமான கடல் மற்றும் கரையோரப் பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.05.2024இல் வெளியிடப்பெற்றது.